**செய்தி வெளியீடு எண்: 87** **நாள்: 04.02.2013**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று **(4.2.2013)** தலைமைச் செயலகத்தில், கரும்பு பயிரிடும் பகுதி ஒதுக்கீட்டுக் குழு உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

தமிழ்நாட்டில் கரும்பு பயிரிடும் பகுதி ஒதுக்கீட்டுக்குழு புதிய சர்க்கரை ஆலைகளுக்கு உரிய கரும்பு பயிரிடும் பகுதிகளை ஒதுக்கீடு செய்வதற்கும், ஏற்கெனவே இயங்கி வரும் தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு பயிரிடும் பகுதிகளைத் தேவைக்கேற்ப மாற்றங்கள் செய்வதற்காகவும் அமைக்கப்பட்டது.

இந்த கரும்பு பயிரிடும் பகுதி ஒதுக்கீட்டுக்குழுவில், விவசாய பிரதிநிதி உறுப்பினர்களாக கோயம்புத்தூர் மாவட்டம், ஆதிமாதையனூர் திரு.செல்வராஜ், தஞ்சாவூர் திரு. தங்கமுத்து மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், திரு. வேட்டவலம் க. மணிகண்டன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கரும்பு பயிரிடும் பகுதி ஒதுக்கீட்டுக் குழு உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்ட திரு. செல்வராஜ், திரு. தங்கமுத்து மற்றும் திரு. வேட்டவலம் க.மணிகண்டன் ஆகியோருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் அதற்கான ஆணைகளை வழங்கினார்கள்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 4.2.2013